**தலைப்பு 311 – தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களம்**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

தலைப்பு 311 – தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2023 மே 26 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களம் தொடர்பான வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2023 மே 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இவ் அறிக்கையின் 1.6 பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினை தவிர்த்து, 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இவ் அறிக்கை 1.6 பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படும்

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாகப் பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன், அம்முறைமையின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தன்மையை இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும், நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்துள்ளன,

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

### (அ) மீண்டுவரும் செலவுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்தினால் வாகன திருத்த வேலைகளுக்காக 05 சந்தர்ப்பங்களில் செலவிடப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 795,000 இற்கான மீண்டுவரும் செலவு விடய இலக்கம் 311-1-1-0-1301 இன் கீழ் மேற்கொள்ள வேண்டியிருந்த போதிலும், அந்தச் செலவு மூலதனச் செலவு விடய இலக்கம் 311-1-1-0-2003 இன் கீழ் செலவிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. இதன் காரணமாக மீண்டுவரும் செலவு ரூபா 795,000 தொகை குறைவாக மற்றும் மூலதனச் செலவு அதே எண்ணிக்கையினால் மிகையாக காட்டப்பட்டிருந்தது. | ஒரு வருடத்திற்கு மிகையான காலம் நிலைத்திருக்கக் கூடிய உதிரிப்பாகங்கள் பொருத்தப்பட்டமையால் 2003 மூலதனச் செலவு விடயத்தின் கீழ் செலவு செய்யப்பட்டிருந்தது. | பிரேக் பேட், சொகட் சோபர், கிலெச் பிலேட் பொருத்துதல் ஆகிய மீண்டுவரும் தன்மையுடைய செலவுகள் என தீர்மானிக்கப்படுவதனால் மூலதன மற்றும் மீண்டுவரும் செலவுகளை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும் என. |

**(ஆ) அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| i. | அரச கணக்குத் திணைக்கள பணிப்பாளர் நாயகத்தின் இலக்கம் 262/2017 மற்றும் 2017 திசெம்பர் 29 திகதிய சுற்றறிக்கையின் பிரிவு 4 இன் படி 2018 இன் பின்னர் ஓய்வு பெற்ற அல்லது இறந்த உத்தியோகத்தர்களிடம் அறவிடப்பட வேண்டிய தொகைகள் ஏதும் முற்பண பீ கணக்கில் காட்டப்படக் கூடாது எனினும், ஓய்வு பெற்ற மூன்று உத்தியோகத்தர்களின் மற்றும் இறந்த ஒரு உத்தியோகத்தரிடம் அறவிடப்பட வேண்டிய கூட்டுத்தொகை ரூபா 541,315 தொகையை அறவீடு செய்யாமல் முற்பண பீ கணக்கில் காட்டப்பட்டிருந்தது. | அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும் என. |
| ii. | திணைக்கள சேவையை விட்டுச் சென்றுள்ள உத்தியோகத்தர் ஒருவரிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா 172,175 தொகை மற்றும் சேவை இடைநிறுத்தப்பட்டுள்ள உத்தியோகத்தர் ஒருவரிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா 183,840 தொகை 4 வருடங்கள் கடந்திருந்த போதிலும் அறவீடு செய்திருக்கவில்லை. | அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | அறவீடு செய்வதற்கு தேவையான முறையான மற்றும் செயற்திறனுள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என. |

**(இ) ஆதனங்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | 2022 திசெம்பர் 13 திகதிய அரச கணக்கு வழிகாட்டல் 2022/05 இன் 8.2 இன் பிரகாரம் நிதி அல்லாத சொத்துக்களை உரிய முறையில் இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், திணைக்களத்தினால் நீண்ட கால அனுபவிப்பின் கீழ் காணப்படும் 08 காணிகள் மற்றும் 04 கட்டிடங்களின் உரிமையை உரித்தாக்கி பெறுமதியை பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மஹியங்கன சுற்றுலா பங்களா மற்றும் செயற்திட்ட அலுவலம் அமைந்துள்ள காணிக்கான நில அளவை வரைபு கிடைத்திருந்தமையால் அவற்றை பெறுமதி மதிப்பீடு செய்வதற்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. ஏனைய காணிகளுக்காக பிரதேச செயலாளர்கள் மூலம் நில அளவை வரைபுகள் மற்றும் காணி உறுதிகள் இதுவரை கிடைத்திருக்காமையால் பெறுமதி மதிப்பீட்டு அறிக்கை பெற்றுக்கொள்ள முடியவில்லை. | நில அளவை அறிக்கை மற்றும் காணி உறுதிகள் பெற்றுக்கொண்டு பெறுமதி மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும் என. |

| | | | |
|---|---|---|---|
| (ii) | திறைசேரிச் செயலாளரின் 2018 திசெம்பர் 31 திகதிய 04/2018 இலக்கம் கொண்ட சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் பிரகாரம் நிதி அல்லாத சொத்துக்கள் கொம்ட்ரோலர் ஜனராலுக்கும் அறிவிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், திணைக்களத்தின் 11 இடங்களில் காணப்படும் 282 நிதி அல்லாத சொத்து விடயங்களை கணக்கீடு செய்யப்படவில்லை. | எதிர் காலத்தில் குழுவொன்று நியமனம் செய்யப்பட்டு குறிப்பிட்ட பண்டங்களின் பெறுமதி பெறுமதி மதிப்பீடு செய்யப்படும். | திணைக்களத்தினால் அனைத்து சொத்துக்களும் கணக்கீடு செய்யப்பட வேண்டியதுடன், அந்த சொத்துக்களின் விபரங்கள் கொம்ட்ரோலர் ஜனராலிற்கு அறிவிக்கப்பட வேண்டும். |
| (iii) | திணைக்களத்தினால் 2021 ஆண்டின் போது கொள்வனவு செய்திருந்த கூட்டுத்தொகை ரூபா 1,149,366 தொகை பெறுமதியான 02 வளி சீராக்கல் இயந்திரங்கள் மற்றும் பொருத்துதல் மற்றும் 2020/2021 ஆண்டுகளின் போது ரூபா 7,909,141 தொகை செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த அனுராதபுர செயற்திட்ட அலுவலக கட்டிடத்தின் பெறுமதி, நிதி அல்லாத சொத்துக்கள் என கணக்கீடு செய்திருக்கவில்லை. | 2023 ஆண்டில் கணக்கீடு செய்யப்பட்டது. | நிதி அல்லாத சொத்துக்கள் கொள்வனவு செய்த ஆண்டில் கணக்கீடு செய்வதற்கு மற்றும் கொம்ட்ரோலர் ஜனராலிற்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என. |

**(ஈ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்களை பேணிச் செல்லாமை**

திணைக்களத்தினால் கீழே காட்டப்பட்டுள்ள சில பதிவேடுகள் பேணப்பட்டிருக்காததுடன், சில பதிவேடுகள் முறைசார் விதமாக மற்றும் நாளதுவரை பேணியிருக்கவில்லை என தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **நிலையான சொத்துக்கள் பதிவேடு**<br>1978 திசெம்பர் 19 திகதிய இலக்கம் 842 கொண்ட திறைசேரிச் சுற்றறிக்கை மற்றும் நிதிப் பிரமாணம் 502(2) பிரகாரம் அதன் 11 பின்னிணைப்பின் படி நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளதுவரை ஆக்கப்பட்டிருக்கவில்லை. | நிலையான சொத்துக்கள் பதிவேடு, காணப்படும் தகவல்கள் மீது நாளதுவரை ஆக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை மற்றும் நிதிப் பிரமாணத்தின் படி திணைக்களத்திற்கு சொந்தமான சொத்துக்களை பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்து நிலையான சொத்துக்கள் பதிவேடு சரியாக மற்றும் நாளதுவரையாக பேணப்பட வேண்டும் என. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 வருமான முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பொலன்னறுவ புலதிசிபுர விடுமுறை விடுதியின் பங்களாவில் தங்குவது தொடர்பாக 3 வருடங்கள் மற்றும் 5 வருடங்களுக்கு இடைப்பட்ட காலம் முதல் ஜனாதிபதி செயலகத்தில் இருந்து திணைக்களத்திற்கு அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட ரூபா 343,800 இற்கான நிலுவை வருமானம் மீளாய்வாண்டு இறுதிவரையும் அறவீடு செய்திருக்கவில்லை. | தொடர் நடவடிக்கை எடுப்பதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. | நிலுவைத் தொகையை விரைவாக அறவீடு செய்வதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ள வேண்டும் என. |

### 2.2 செலவு முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மூலதன செலவு விடய இலக்கம் 311-1-1-1-2506 இன் கீழ் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 6,700,000 இற்கான தொகையில் ரூபா 3,805,648 தொகை அதாவது 57 சதவீதமும் அபிவிருத்தி அலுவல்களுக்காக செலவிடப்படாமல் வருட இறுதியில் சேமிக்கப்பட்டிருந்தது. முறையான திட்டமொன்றின் படி தேவையான ஏற்பாடுகள் ஒதுக்கிக் கொள்ளாமை இந்த நிலைமைக்கு நேரடியான காரணமாக இருந்தது. | நாட்டில் நிலவிய சிக்கல் தன்மையின் காரணமாக பௌதீக திட்டங்கள் தயாரிக்கும் அலுவல்கள் தாமதம் அடைந்தமையால் இந்த சேமிப்பு நேரிட்டிருந்தது. மேலும் லோலுகஸ்வெவ செயற்திட்டத்திற்காக வழங்கியிருந்த ஏற்பாடுகள் போதியளவாக காணப்படவில்லை. | எதிர் கால நிலைமை தொடர்பாக போதிய ஆய்வொன்று மேற்கொண்டு முறையான திட்டமொன்றின் படி ஏற்பாடுகள் ஒதுக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என. |

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி ரூபா | இணங்காமைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (i) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபனக் கோவை அத்தியாயம் xiv பந்திகள் 03 மற்றும் 04 | 1,310,732 | கடமை பிரயாணங்கள் மேற்கொள்ள வேண்டியது அரசுக்கு குறைந்த செலவு ஒன்று மேற்கொள்ளும் விதமாக இருக்க வேண்டியதுடன், அது பிரயாண செலவு விண்ணப்பம் (பொது 177) | வலையம் சார் பௌதீக திட்டங்கள் தயாரிக்கும் உத்தியோகத்தர்கள் மாத்திரம் பிரயாண செலவு விண்ணப்பங்கள் மூலம் தீர்ப்பதற்கு | சட்ட விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த போதிலும் விஷேட நிலைமைகளுக்க |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | மூலம் தீர்க்கப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு செய்யாமல் திணைக்கள உத்தியோகத்தர்களின் வெளிக்கள கடமை அலுவல்களுக்காக தங்கு வசதிகள் மற்றும் உணவுகளுக்காக வரையறை ஏதும் இன்றி பணம் செலவிடப்பட்டிருந்தது. | பதிலாக பெறுகை நடைமுறையின் படி நடவடிக்கை எடுத்து தங்குமிடம் மற்றும் உணவு பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. அவர்களுக்கு பிரயாணச் செலவுக் கொடுப்பனவு செய்யப்படவில்லை. | ாக தனியாக அங்கீகாரம் பெற்றுக்கொள்ள வேண்டும் என. |
| (ii) | பொது நிருவாக மற்றும் உள்நாட்டு விவகார அமைச்சுச் செயலாளரின் இலக்கம் 30/2016 மற்றும் 2016 திசெம்பர் 29 திகதிய சுற்றறிக்கையின் பிரிவு 4.3 | 1,599,200 | அரச வாகனங்களின் பராமரிப்பு தொடர்பாக வாகன திருத்த வேலைகளின் போது பொறியியலாளர் சான்றிதழ் பெற்றுக்கொண்டு கொடுப்பனவு செய்ய வேண்டியிருந்த போதிலும், 14 சந்தர்ப்பங்களில் மேற்கொண்டிருந்த திருத்த வேலைகளுக்காக அவ்வாறான சான்றிதழ் ஒன்று பெற்றுக்கொள்ளாமல் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | எதிர் காலத்தில் இயந்திரப் பொறியியலாளர் ஒருவரை ஈடுபடுத்துதல் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கையின் பிரகாரம் வாகன திருத்த வேலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என. |

## 2.4 முற்பணங்கள் வழங்கல் மற்றும் தீர்த்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 திகதிய 01/2020 இலக்கம் கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கையினால் திருத்தப்பட்ட மற்றும் நிதிப் பிரமாணம் 371(5) பிரகாரம் நிமித்தக் கட்டுநிதி பெற்றுக்கொள்ளும் பதவியணி உத்தியோகத்தர்களினால் தமது கருமங்கள் முடிவடைந்து 10 நாட்களுக்குள் தீர்க்கப்பட வேண்டியிருந்த போதிலும் 20 சந்தர்ப்பங்களில் கூட்டுத்தொகை 857,470 தொகை பெறுமதியான துணைக் கட்டுநிதிகள் 12 – 64 நாட்கள் இடைப்பட்ட கால தாமதத்துடன் தீர்க்கப்பட்டிருந்தது. | எதிர் காலத்தில் துணை கட்டுநிதிகள் 10 நாட்களுக்குள் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என உத்தியோகத்தர்களுக்கு அறிவுருத்தப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் துணைக் கட்டுநிதிகள் 10 நாட்களுக்குள் தீர்க்கப்படக் கூடியவாறு செய்முறை மற்றும் நடவடிக்கை முறைகளை அறிமுகப்படுத்துதல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும் என. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 தூர நோக்கு மற்றும் பணி நோக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களத்தின் தூர நோக்கு ஆகிய நேர்த்தியான வளம் பொருந்திய திறனுள்ள நிலையான தன்னிறைவுள்ள பாதுகாக்கப்பட்ட அழகான தேசமாகும், பணி நோக்கு ஆவன, தேசிய பௌதீக திட்டமிடல் கொள்கைகள், திட்டங்கள் மற்றும் மூலோபாயங்கள் தயாரித்தல், மற்றும் இலங்கையின் நிலப்பரப்பு மற்றும் அதன் கடல் எல்லைக்குரிய பிரதேசங்களின் பொருளாதார, சமூக பொது மற்றும் சுற்றாடல் சார் பிரிவுகளின் ஒன்றித்த திட்டமொன்று முறையாக ஏற்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் வலயம் சார் மற்றும் பிரதேச திட்டமிடல் மூலம் அந்த தேசிய கொள்கைள் மற்றும் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதை உறுதிப்படுத்தல் மற்றும் கட்டுப்படுத்தலும் ஆகும். அவ்வாறாயினும், அந்த பணி நோக்கிற்கு புறம்பாக புனித பூமிகளை சுத்தம் செய்தல் மற்றும் ஏனைய அலுவல்களுக்காக திணைக்களத்தின் 64 ஊழியர்கள் தொடர்ச்சியாக ஈடுபடுத்தப்பட்டிருப்பதுடன், அதற்காக சம்பளம் மற்றும் மேலதிக நேர கொடுப்பனவு ஆக ரூபா 25,349,196 தொகை மீளாய்வாண்டிற்காக திணைக்களம் செலவிடப்பட்டிருந்தது. இதற்காக நகர மற்றும் கிராம வடிவமைப்புச் சட்டத்தில் ஏற்பாடுகள் காணப்படவில்லை என அவதானிக்கப்பட்டது. | இந்த பதவியணியினை புத்த சாசன அமைச்சிற்கு இணைக்குமாறு அந்த அமைச்சின் செயலாளருக்கு கோறிக்கையொன்று விடுக்கப்பட்ட போதிலும் அது மறுக்கப்பட்டிருந்தது. அது தொடர்பாக நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் மற்றும் மத மற்றும் பண்பாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளரின் தலைமைத்துவத்தில் கூட்டமொன்று கூடுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. | திணைக்களத்தின் தூர நோக்கு மற்றும் பணி நோக்கு மற்றும் குறிக்கோள்கள் தொடர்பாக கவனம் செலுத்தி உரிய விடயப் பரப்புக்குள் அந்த குறிக்கோள்களை நெருங்குவதற்கு இயலுமான முறையில் பொருத்தமான நிலவுகின்ற வளங்களை செயற்திறனுடன் மற்றும் ஆக்கபூர்வமாக மற்றும் சிக்கனத்துடன், பயன்படுத்த வேண்டும் என. |

## 3.2 பணிப் பொறுப்புகளை நிறைவேற்றாமை

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1946 இன் 13 ஆம் இலக்க நகர மற்றும் கிராம வடிவமைப்புக் கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 269) மற்றும் 2000 இன் 49 இலக்க நகர மற்றும் கிராம வடிவமைப்பு (திருத்தப்பட்ட) சட்டத்தின் 07 பந்தியின் பிரகாரம் தேசிய பௌதீக வடிவமைப்பு கொள்கைகள் தயாரித்தல் மற்றும் தேசிய பௌதீக திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். 2021 வருடாந்த செயல் நடவடிக்கை திட்டத்தின் படி 2021 ஒக்தோபர் 31 திகதி அளவில், 2019 ஆண்டில் தயாரிக்கப்பட்டிருந்த தேசிய பௌதீக திட்டமிடலுக்கு தேவையான திருத்தங்கள் மேற்கொள்ள வேண்டியிருந்த போதிலும், அந்த அலுவல்கள் 2022 திசெம்பர் 31 திகதி வரை பூர்த்தி செய்திருக்கவில்லை. 2019 ஆண்டின் பின்னர் அதாவது 2020 முதல் 2022 ஆண்டு இறுதி வரையான காலப் பகுதியில் திணைக்களம் இதற்காக ரூபா 529,351,900 தொகையொன்று செலவிடப்பட்டிருந்த போதிலும் தேசிய பௌதீக திட்டத்திற்கு தேவையான திருத்தங்கள் மேற்கொண்டு அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2022 ஜனவரி தேசிய பௌதீக திட்டமிடல் கொள்கை மற்றும் திட்டத்தில் திருத்தங்கள் தயாரிக்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. அமைச்சுக்கள் இடையிலான கூட்டினைப்புக் குழுவின் பரிந்துரையும் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. ஜனாதிபதியின் தலைமையில் நடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள தேசிய பௌதீக மூலப் பிரமாணங்கள் சமர்ப்பிப்பதற்கு நாளொன்று வினவப்பட்டுள்ளது. 2023 மே 29 திகதி வரை நாளொன்று அறிவிக்கப்பட்டிருக்கவில்லை. | சட்டத்தின் 07 பிரிவின் பிரகாரம் தேசிய பௌதீக திட்டம் பாராளுமன்ற அமைச்சரவையினாலும் அங்கீகரிக்கப்பட வேண்டியதுடன், நாட்டில் மேற்கொள்ளப்படும் பௌதீக வடிவமைப்புக்கள் அதற்கு இணங்க மேற்கொள்ளப்பட வேண்டும். அவ்வாறு அல்லாத சந்தர்ப்பங்களில் திணைக்களம் அது பற்றி வெளியிட வேண்டியிருந்தது. |
| (ஆ) | அனுராபுர புனித பூமியில் குடியிருப்பு செயற்திட்டத்தை வரையறுத்தல் மற்றும் அங்கீகாரமற்ற நிர்மாண வேலைகளை அவற்றிலிருந்து அகற்றுதல், திணைக்களத்திற்கு உரிய பணிப் பொறுப்பொன்றாக காணப்படாத போதிலும், அமைச்சரவை தீர்மானத்தின் படி அந்த கருமத்திற்காக லோலுகஸ்வெவ நகர வடிவமைப்பு செயற்திட்டத்தை செயற்படுத்துதல் திணைக்களத்திற்கு சாட்டப்பட்டிருந்தது. அதன்படி, | லோலுகஸ்வெவ 2021 ஜூன் இல் காணித்திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மீள்குடியேற்ற நடவடிக்கை திட்டமொன்று காணி திணைக்களத்தினால் கோரப்பட்டுள்ளது. அதை தயார் செய்வதற்கு ஆலோசகர்களை நியமிக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. மேலும் சமூக நில அபிவிருத்தி பணிகளுக்கு அதிகாரிகள் இந்த அலுவலகத்தை பயன்படுத்தி வருகின்றனர் | தமது விடயப் பரப்பினுள் அடங்காத அலுவல்கள் தொடர்பாக பொறுப்புக்களை பெற்றுக்கொள்ளல் தொடர்பாக முகாமைத்துவம் பொறுப்பாக இருக்க வேண்டியதுடன், இந்த உரித்தில்லாத கருமங்களுக்காக வளங்களை பயன்படுத்துவதன் மூலம் தனது நியதிச் சட்டரீதியான |

| | | |
|---|---|---|
| 2016 இல் ஆரம்பிக்கப்பட்டு 2022 வரையான காலப் பகுதிக்காக ரூபா 634.7 மில்லியன் தொகை ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்தது. அவ்வாறாயினும், 2022 ஆண்டு வரை அவற்றில் 13.4 மில்லியன் தொகை அதாவது 2 சதவீதம் மாத்திரம் செலவிடப்பட்டிருந்ததுடன், செயற்திட்ட அலுவலகம் மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. மேலும், அங்கீகாரமற்ற வதிவோரை அகற்ற முடியாமையால் மீள்குடியேற்றத்திற்காக செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிப்பதற்காக ரூபா 11.4 மில்லியன் தொகை செலவிடப்பட்டு உசாத்துணை சேவையொன்று பெற்றுக்கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. அத்துடன், அனுராதபுர புனித பூமியை துப்புறவு செய்தல் ஆகிய அலுவல்களில் ஈடுபட்டுள்ள திணைக்கள உத்தியோகத்தர்கள் இந்த செயற்திட்ட அலுவலகத்தில் வசித்து வருவதுடன், அவர்களுக்கு சம்பளமாக வருடாந்தம் ரூபா 3.3 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. இதன்படி, 06 வருடங்கள் கழிந்திருந்த போதிலும் இந்த செயற்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட கருமங்கள் மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது. | | நிறுவனத்தின் விடயப் பரப்பில் அடங்கும் தேசிய முக்கியத்துவமுடைய கருமங்களை நிறைவேற்றுவதில் தாமதம் அடைகிறது அல்லது தவிர்க்கப்படுகின்றது என அவதானிக்கப்பட்டது. இதன் காரணமாக தனது விடயப் பரப்பிற்கு உரிய கருமங்களை நிறைவேற்றுவதற்கு முகாமைத்துவத்தினால் நடவடிக்கை எடுக்க வேண்டும் என. |

**3.3 எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டம் அடையப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 ஆண்டில் சேவை நிலையங்கள் (சிறு நகர்கள்) அபிவிருத்தி திட்டத்தின் கீழ் 08 மாகாணங்களில் 21 சிறு நகரங்களுக்கான பௌதீக திட்டம் தயாரிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 2022 ஆண்டு இறுதி வரை அவ்வாறான திட்டங்களின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | 20 பிரதேச பௌதீக திட்டங்கள் தயாரிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் கொரோனா தொற்றுநோய் நிலைமை அதற்கு பாரிய பாதிப்பை ஏற்படுத்தியிருந்தது. அதன் காரணமாக தலைமை அலுவலகத்திற்கு அண்மித்த 08 நிலையங்களுக்காக திட்டங்கள் தயாரிப்பதற்கு | திட்டமிடப்பட்டவாறு பௌதீக திட்டங்கள் தயாரித்து சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என. |

| | | |
|---|---|---|
| முகாமைத்துவத்தின் பலவீனமான மேற்பார்வை இதற்கு காரணமாக இருந்தது. இதன் காரணமாக இந்த 21 நகரங்களில் பொருத்தமற்ற நிர்மாண வேலைகள் மற்றும் பொது வசதிகள் திட்டமிடப்படாமல் நிர்மாணிக்கப்படாமையால் சுற்றாடல் சிக்கல்கள் ஏற்படுவதற்கு காரணமாக இருந்ததென அவதானிக்கப்பட்டது. | தீர்மாணிக்கப்பட்டிருந்தது. | |

**3.4 பெறுகை**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2006 பெறுகை வழிகாட்டல் கோவையின் 2.11.1,2,3 பிரிவுகளின் பிரகாரம் அனைத்து பெறுகைக் குழு கூட்டங்களும் கால அட்டவணையின் படி நடைபெற வேண்டியதுடன், கூடப்பட்டதற்காக தின வரவுப் பதிவேடு மற்றும் கூட்ட அறிக்கை குறிப்பிட்ட படிவத்தின் பிரகாரம் பேணப்பட வேண்டியிருந்த போதிலும் திணைக்களம் அவ்வாறு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2006 பெறுகை வழிகாட்டல் கோவையின் 2.11.1,2,3 பிரிவுகளின் பிரகாரம், பெறுகை கால அட்டவணை பெறுகைத் திட்டத்தில் உட்படுத்தப்பட்டிருக்காத போதிலும், பெறுகை வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம், நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பெறுகை வழிகாட்டல் கோவையின் படி குழுக் கூட்டங்கள் தொடர்பான அறிக்கைகள் பேணுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என. |
| (ஆ) | பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரிவு 4.2 இன் பிரகாரம் விரிவான பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு பெறுகைத் திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை. | 2023 ஆண்டு முதல் தயாரிக்கப்பட்டுள்ளது. | பெறுகை வழிகாட்டல் கோவையின் படி விரிவான பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும் என. |
| (இ) | பெறுகை செயல்முறையை மிகவும் முறையாக மற்றும் திறமையான முறையில் பராமரிப்பதற்காக, 2019 திசெம்பர் 17 திகதிய 08/2019 அரச நிதிச் சுற்றறிக்கை பிரகாரம் இலத்திரனியல் அரச பெறுகை முறைமையொன்று நிறுவப்பட்டிருந்ததுடன், அதற்காக பெறுகை நிறுவனங்கள் பதிவு செய்தல், தொடர்பாடல் உத்தியோகத்தர் ஒருவர் பதிவு செய்தல் (LOS), விற்பனையாளர்கள் பதிவு செய்தல், வருடாந்த பெறுகை திட்டம், பெறுகை அறிவிப்பு முறை ஆகியவற்றை வெளியிடுதல் மற்றும் சந்தை உருவாக்கும் முறைக்காக | 2023 ஆண்டின் போது பதிவு செய்யப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் அரச இலத்திரனியல் பெறுகை முறைமையுடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் என. |

(shopping, method) இலத்திரனியல் பெறுகை முறையைப் பயன்படுத்த வேண்டியிருந்த போதிலும், திணைக்களத்தினால் மீளாய்வாண்டின் போது அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை.

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| குண்டசாலை பிரதேச செயலாளரினால் திணைக்களத்தினால் பயன்படுத்துவதற்காக வழங்கியிருந்த பெறுமதி மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 5,000,000 தொகைக்கான 0.0506 ஹெக்டயர் காணியொன்று எதுவித அபிவிருத்தி அலுவல்களுக்கும் பயன்படுத்தப்படாமல் 13 வருடங்களாக விளைவற்று காணப்பட்டது. | பாதீட்டு சுற்றறிக்கை இலக்கம் 02/2023 இன் கீழ் அத்தியவசியமான அரச சேவைகள் தடை ஏதும் இன்றி பேணிச் செல்வதற்காக மாத்திரம் நிதி ஏற்பாடுகளை பயன்படுத்த வேண்டும் என எடுக்கப்பட்டுள்ள தீர்மானத்தின் படி அபிவிருத்தி அலுவல்களுக்காக ஏற்பாடுகள் விண்ணப்பிப்பதற்கு முடியாமல் இருந்தது. | உரித்தாக்கப்பட்ட காணி எதிர்பார்த்த கருமத்திற்காக ஈடுபடுத்த முடியாவிடின் வேறு ஏதும் முக்கியமான கருமங்களுக்காக பயன்படுத்துவதற்காக திருப்பி உரித்தாக்கப்பட வேண்டும் என. |

## 3.6 முகாமைத்துவ பலவீனங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 05 சுற்றுலா பங்களாக்கள் மற்றும் இளைப்பாறும் இடங்கள் மூலம் மீளாய்வாண்டின் போது கிடைத்திருந்த வருமானம் ரூபா 870,250 தொகை எனினும், அவற்றிற்கு இணைக்கப்பட்டுள்ள 12 பதவியணியினர் காணப்பட்டதுடன், அவர்களின் சம்பளம் மற்றும் மேலதிக நேர கொடுப்பனவிற்காக ரூபா 27,460,762 தொகை செலுத்தப்பட்டிருந்தது. அதன்படி, சுற்றுலா பங்களாக்கள் நடாத்துவதன் மூலம் நட்டம் அடைந்த போதிலும் அந்த பங்களாக்களை இலாபகர தன்மையுடன் நடாத்திச் செல்வதற்கு தேவையான திட்டங்கள் தயாரித்திருக்கவில்லை. | 2021 கோவிட் மற்றும் 2022 நாட்டில் நிலவிய எரிபொருள் நெருக்கடியினால் சுற்றுலா பயணிகளின் வருகை குறைவாக இருந்தது. | வருமானத்தை அதிகரிப்பதற்கு மற்றும் செலவுகளை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மூலதன செலவு இலக்கம் 311-1-1-0-02-2506 கீழ் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 6,700,000 தொகையிலிருந்து ரூபா 3,805,648 தொகை அதாவது 57 சதவீதமும் அபிவிருத்தி அலுவல்களுக்காக செலவிடப்படாமல் வருட இறுதியில் சேமிக்கப்பட்டிருந்தது. | லோலுகஸ்வெவ செயற்திட்டம் செயற்படாமையால் ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டது. | ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகளை செலவிடப்பட்டு உரிய குறிக்கோள்களை குறிப்பிட்ட நாட்களில் நிறைவேற்றிக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 04 நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தேசிய பாதீட்டுத் திணைக்களத்தின் 02/2017 இலக்கச் சுற்றறிக்கையின் பிரகாரம் விளைவுச் சுட்டிகளை இனங்காணல், பிரதான விடயச் சுட்டிகளை வெளியிடுதல் நிறுவனத்தின் பணிப் பொறுப்புக்கள் மற்றும் தொடர்புடைய தரப்பினரை இனங் காணல் நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோளின் ஒருங்கிணைப்பு தொடர்பாக உத்தியோகத்தர்களை இனங்காணல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள் தொடர்பான தேசிய பாதீட்டுத் திணைக்களத்தின் 02/2017 இலக்க சுற்றறிக்கையின் படி வெளியீட்டு சுட்டிகளை இனங்காணல், பிரதான விடய சுட்டிகளை வெளியிடுதல் மற்றும் நிறுவனத்தின் சுட்டிகள் பணிப்பொறுப்புக்களை இனங்காணல் தற்போது பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன், தொடர்புடைய தரப்பினரை இனங்காணும் அலுவல்கள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்களை இனங் காண்பதற்காக சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும் என. |

## 05. மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 289 ஆக காணப்பட்டதுடன், உள்ளவாறான பதவியணி 178 ஆக காணப்பட்டமையால் 111 வெற்றிடங்கள் காணப்பட்டது. இவற்றில் திணைக்களத்தின் பணிப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதில் தாக்கத்தை ஏற்படுத்தும் பணிப்பாளர் (திட்டமிடல்) 30 பதவிகளும் காணப்பட்டது. | 2022.09.02 திகதிய தேசிய பாதீட்டு சுற்றறிக்கை இலக்கம் 05/2022 இன் படி திரண்ட நிதியத்தில் இருந்து சம்பளம் செலுத்தப்படும் பதவிகளுக்காக ஆட்சேர்ப்பு அலுவல்கள் தாமதிப்பதற்கு நேரிட்டுள்ளது. | அத்தியவசியமான பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு மேற்கொள்வதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |